25 வது

# ஆண்டு விழா மலர்




## கோண்டாவில் வடக்கு கலைவாணி ஐக்கிய நாணய சங்கம்.

60.013

2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆவது ஆண்டு விழா மலர்

**கோண்டாவில் வடக்கு,**
**கலைவாணி ஐக்கிய நாணய சங்கம்**

**2012**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர். பாலசுப்பிரமணியம் நாகேஸ்வரி

கோண்டாவில் வடக்கு கலைவாணி சி.க.கூ. சங்க ஸ்தாபகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய பிரதமகுருவின்

# ஆசிச்செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஈழமணித் திருநாட்டின் மணிமுடியாகத் திகழும் யாழ்ப்பாண நகரிலே சகல செல்வங்களையும் தன்னகத்தே கொண்ட அழகிய கிராமமே கோண்டாவில் கிராமம். இக்கிராமத்திலே " மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற முதுமொழிக்கு ஏற்ப கிராம மக்களின் வளர்ச்சியையும், சமூக சேவையையும் நோக்கமாகக் கொண்டு 20.04.1987 இல் ஆரம்பிக்கப் பட்டதே கலைவாணி சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கமாகும். ஆரம்ப நாட்களில் குறைந்தளவு அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கமானது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து தற்போது 60 இயங்கும் அங்கத்தவர்களைக் கொண்டு சிறப்பாக இயங்கி வருகிறது. அங்கத்தவர்களுக்குக் கடன் வழங்குவ தோடு மட்டுமல்லாது சிறுவர் சேமிப்பு, பரிசூதியம், அங்கத்தவர்களின் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களுக்கு அன்பளிப்பு வழங்குவது எனப் பல சேவைகளையும் வழங்கிவருகிறது. ஒற்றுமை, கடப்பாடு, சமூக சேவை என்பவற்றை நோக்கமாகக் கொண்ட இச் சங்கமானது யாழ். மாவட்டத்திலே இயங்கிவரும் சங்கங்களிலே முன்னணி வகிக்கும் சங்கமாக விளங்கிவருகிறது. இத்தனை சிறப்புகள் வாய்ந்த இச் சங்கமானது இவ்வருடம் வெள்ளி விழாவினைக் கொண்டாடுவதை யிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். மேன்மேலும் சிறப்பாக வளர்ந்து இன்னும் பல சேவைகளையும் வழங்கவேண்டும் என மனோன்மணி அம்பிகா சமேத சிவபூதவராயப் பெருமான் பாதக் கமலங்களை வணங்கி ஆசி கூறுகிறேன்.

இங்ஙனம்,
பிரம்மஸ்ரீ ஞானசம்பந்த ஜோதிநாதக்குருக்கள்,
பிரதம குரு,
ஸ்ரீ மனோன்மணி அம்பிகா சமேத சிவபூதவராயர் தேவஸ்தானம்,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

உலகெங்கும் ஒற்றுமையும், ஒருமைப்பாடும், நேர்மையும் இலட்சியப்பற்றும் கொண்ட பொருளாதார அமைப்பில் வாழ்ந்த கோடிக்கணக்கான ஏழைத் தொழிலாளர்களையும் அப்பாவி மக்களை யும் ஒன்றிணைத்து உருவாக்கிய பலம் பொருந்திய சமூக, பொருளாதார கலாசார மக்கள் அமைப்பைக் கொண்ட நிறுவனங்களாகவும், சமூக நிறுவனங்களாகவும் திகழ்பவையே கூட்டுறவு அமைப்புகள் ஆகும்.

அந்தவகையில் **1987** ஆம் ஆண்டு கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலில் ஆரம்பிக்கப்பட்ட கலைவாணி சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளிவிழாச் சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இச்சங்கமானது வங்கி அமைப்புகள் கிராமப் புறத்தில் வளர்ச்சியடை யாத அன்றைய கால கட்டத்திலிருந்து அப்பிரதேச மக்கள் நிதி தேவையறிந்து அதனைப் பூர்த்தி செய்ததோடு மட்டுமல்லாது மக்கள் அனைவரையும் சமூகத்தோடு ஒன்றிணைந்து தனது சேவையையும் வழங்கி வருகின்றது. மூலை முடுக்கெங்கும் நிதி நிறுவனங்கள் வியாபித்துள்ள இவ்வேளையிலும் அதே நிறுவனங்களுக்கு நிகராக தன்னையும் ஈடுபடுத்தியுள்ளது. போர்க்கால சூழலிலும், தளராத தன்நம்பிக்கையுடன் மீண்டும் கூட்டுறவை வளர்த்து சேவையாற்றி வருகின்ற கலைவாணி சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் பிறந்திருக்கும் நந்தன வருடத்தில் தனது வெள்ளிவிழாவைக் கொண்டா டிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தொடர்ந்து தனது சிறப்பான செயற்பாடுகளையும் சேவைகளையும் முன்னெடுத்துச் செல்ல எல்லாம் வல்ல கலைவாணியின் ஆசிகளை வேண்டி நிற்கின்றேன்.

திரு. நி. பொ. ஜேசுராசா
தலைவர்,
பிராந்திய சபை, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

# ஆசிச்செய்தி

கோண்டாவில் வடக்கு கலைவாணி சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் 2012.04.20இல் தனது 25ஆவது ஆண்டினைப் பூர்த்தி செய்துள்ளது. விரைவான மாற்றங்களினால் 25 ஆண்டுகள் என்பது ஒரு குறுகிய காலமாகவே தென்படுகின்றது. சுய உதவிகள், பரஸ்பர உதவி, விடாமுயற்சி, அதிகவட்டி பெறாமை, சமூகப் பொறுப்புணர்வு, தன்னலமற்ற சேவை, சனநாயகப் போக்கு, சமத்துவம், கல்வி வளர்ச்சி, புரிந்துணர்வு, ஐக்கிய உணர்வு போன்ற கூட்டுறவு விழுமியங்களைக் கடைப்பிடித்துத் தனது உறுப்பினர்களின் தேவை உணர்ந்து சேவையாற்றிய இச்சங்கமானது; நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாகப் பல சவால்களுக்கு மத்தியில் எதிர் நீச்சலடித்துத் தனது சேவையைத் தொடர்ந்து வளர்ச்சி அடைந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கதொன்றாகும்.

மேலும், என்ன நோக்கத்திற்காக இச்சங்கம் உருவாக்கப் பட்டதோ அந்நோக்கம் விரிவடைந்து, நல்லதொரு கூட்டுறவுச் சமுதாயத்தைக் கட்டியெழுப்பி எதிர்காலத்தில் பெருவிருட்சமாக வளர மனப்பூர்வமாக வாழ்த்துவதுடன், 29.04.1987இல் இருந்து இன்றுவரை நல்வளர்ச்சிக்கு உதவிபுரிந்த பழைய, புதிய தலைவர்கள், செயலாளர், பொருளாளர்கள், இயக்குநர் சபை உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், கிராம மக்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைச் சங்கத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. செ. இலகுநாதன்,
தலைவர்,
யாழ். மாவட்ட சி.க.கூ.ச. சமாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கலைவாணி சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கமானது வெள்ளிவிழாவினைக் கொண்டாடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இச்சங்கமானது 20 அங்கத்தவர்களுடன் 29.04.1987 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு J/1999ஆம் இலக்கத்தில் கூட்டுறவுச் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டு சிறப்பாக இயங்கிவருவதுடன், தற்போது 69 உறுப்பினர்களினைக் கொண்டுள்ளது. அங்கத்தவர்களுக்கு வழங்குகின்ற தனியார் கடனின் அளவு 100,000.00 ரூபாவாக அதிகரித்துச் சிறப்பான முறையில் கடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. சங்கமானது 31.03.2011 ஆம் திகதிய கணக்காய்வு அறிக்கையின்படி மீதி இலாபமாக ரூபா 25,179.28 சதத்தைப் பெற்றுள்ளது. தற்போதைய தகவல்களின்படி அங்கத்தவர் களிடம் சாதாரண சேமமாக ரூபா 10, 97,582.00 கட்டாயச் சேமமாக ரூபா 157,167.00 வைப்பாகப் பெற்றுள்ளது. அதேநேரம் யாழ். மாவட்ட சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற் சேம வைப்பாக ரூபா 866,477.00, கட்டாய சேம வைப்பாக ரூபா 128,542.00 வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் செயற்பாடு தொடர்ந்து வளர்ச்சி அடைந்து செல்வதனை அவதானிக்க முடிகின்றது. யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை தற்பொழுது நற்பெயருடன் விளங்குவதற்கு உதவுவனவாக இத்தகைய சங்கங்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

கலைவாணி சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தினைத் திறமையாக வளர்ச்சியடையச் செய்த கடந்தகால, தற்காலத் தலைவர்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் அனைவருக் கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், இச்சங்கத்தின் அங்கத்தவர்களினதும், அக்கிராம மக்களினதும் நலன்கருதிச் சிறப்பாக இயங்க எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு. வி.கே. அருந்தவநாதன்,<br>
கூ.அ.உ.ஆணையாளர்,<br>
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்வாகசபை உறுப்பினர்கள் 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐக்கியநாணய சங்க உறுப்பினர்கள் 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் வடக்கு ஐக்கிய நாணய சங்க வரலாறு

அக்காலத்தில் வாழ்ந்த கோண்டாவில் வடக்கு பெரியோர்களினால் கோண்டாவில் வடக்கு மக்களின் நன்மை கருதியும், கிராம வளர்ச்சி கருதியும் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் ஆரம்ப கர்த்தாவாக மறைந்த தலைவர் திருமதி பாலசுப்ரமணியம் நாகேஸ்வரி காணப்பட்டார். 1982ஆம் ஆண்டு, கோண்டாவில் வடக்கு கலைவாணி வீதியில் தலைவர் திருமதி பா.நாகேஸ்வரி இல்லத்தில் ஆரம்பமானது.

ஆரம்பத்தில் உறுப்பினர்களது சேமத்தைக் கொண்டே கடன்கள் வழங்கப்பட்டது. ஆரம்பத்திலே எமது சங்கத்தை வளர்க்கப்பாடுபட்டவர்களில் திருமதி பா. நாகேஸ்வரி, திருமதி ஜீ.பரமேஸ்வரி, திருமதி செ. பரிமளம், திரு. கருணாகரன், திருமதி சி.சரஸ்வதி, திருமதி நா. சந்திரலேகா ஆகியோரை நினைவு கூறுவதில் இன்று நாம் பெருமிதமடைகின்றோம்.

அத்தோடு எமது சங்கத்தின் காலமான உறுப்பினர்களை நினைவு கூறுகையில் திருமதி சி. சரஸ்வதி, திருமதி ச. சிவலோகநாயகி, திருமதி பா. நாகேஸ்வரி, திருமதி ஜீ. பரமேஸ்வரி போன்றோரைக் குறிப்பிடுவதோடு தவறுதலாக விடுபட்ட மறைந்த அல்லது விடுபட்ட தலைவர், உறுப்பினர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

1982 இல் ஆரம்பமான எமது சங்கம் 1987.04.29 இல் சமாசத்தில் பதிவுசெய்யப்பட்டது. அதன் பின்பு சங்கத்துக்கெனக் கட்டடம் இல்லாத சூழ்நிலையில் சில அங்கத்தவர் ஆதரவில் அவர்களது வீட்டில் இயங்கிவந்த பின்பு 2003 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட கோண்டாவில் பொதுமண்டபத்தில் இன்று எமது சங்கம் இயங்கிவருகின்றது. தற்போது தலைவராக திருமதி ஞானபாலசிங்கம் சந்திராதேவி, செயலாளர் செல்வி ஜமுனாநிதி சுந்தரம், பொருளாளர், திருமதி கோபித்குமார் சுகந்தி என்போருடன் இயங்கும் அங்கத்தவர் 61உம் உறங்கும் அங்கத்தவர் 16 பேர் கொண்ட சங்கமாக வளர்ச்சி கண்டுள்ளது.

25ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடும் எமது சங்கமானது இன்றுவரையில் பல முரண்பாடு, சிக்கல்கள், சவாலை எதிர்கொண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நிலைத்து நிற்பதைக் கண்டு பூரிப்படைகின்றோம். இன்றைய நிர்வாகத்தின் விடாமுயற்சியினால் இன்று இம்மலர் எமது கரங்களில் தவழ்கிறது. இது எமது அங்கத்தவர் ஒவ்வொருவரினதும் பெருமைக் குரிய விடயமே ஆகும்.

சங்க சேவைகள், சாதாரண கடன், பொதுக்கடன், கல்வி கடன், தனிநபர் உச்சக்கடன் எல்லை 150,000/-, வெளிக்கடன் எல்லை 500000/- முதல் 75,00000/-, அங்கத்தவர் சேமிப்பு, சிறுவர் சேமிப்பு, அங்கத்தவருக்கு அன்பளிப்பு வழங்கல், கிராம வளர்ச்சிக்கான உதவிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கனமாய் வாழ மங்கையரே மகிழ்ந்து வாரீர்...

பெண்ணே ! இப்பூமியில்
பெரும்பாரம் உன்னது
மண்ணில் மங்கையாய்
பிறந்தது ஓர் பாரம்
கருவில் குழந்தையை
சுமப்பதும் ஓர் பாரம்
குடும்பச் சுமையோ - உன்
சிரசில் பெரும்பாரம்
பாரம் பார மென்று
பதுங்கி இருக்காது
விண்முட்ட வீறுகொண்டு
விரைந்து விடு புதுப்பெண்ணாய்....

(பால்) மாவோடு மண்ணெண்ணை
மலைபோல விலையேற
பாணோடு பலகாரம்
படிப்படியாய் அவையேற
ஊதியமோ உயராமல்
உள்ளபடி தானிருக்க
சிக்கனமாய் வாழ்வதற்கு
சிந்தனை செய் மனையாளே...

குசினியில் மின்விளக்கு
போட்டபடி தானிருக்க
மின்அடுப்பில் சுடுதண்ணீர்
ஆவி பறந்திருக்க
தொலைக்காட்சிப் பெட்டி முன்னே
அம்மா அமர்ந்திருந்து
அத்தை முதல் தங்கம் என
அடுத்தடுத்து தொடர்பார்க்க
சிக்கனத்தைப் பற்றி சிந்திப்பார்
யாரிங்கே?....

உழுந்து பயறென்று
தானியங்கள் பயிர்செய்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுத் தேவைகளை
செய்வீர் சுயமாக
வீட்டுத் தோட்டமதில்
காய்கறிகள் நாட்டிடுவீர்
வீட்டுச் செலவுகளை
சிக்கனமாய்க் கொண்டருவீர்
சிறு சிறு சேமிப்பு
தினம் தினம் செய்திடுவீர்
பனை தந்த பல உணவு
நம்மண்ணில் நிறைய உண்டு
அவை எல்லாம் எம் உடம்பில்
ஒட்டாதா? ஏன் பெண்ணே!
எம் முன்னோர் இவை செய்தே
சிக்கனமாய் வாழ்ந்தார்கள்.

கூட்டுறவே நாட்டுயர்வாய்
குடும்பத்தைச் சிக்கனமாய்
மாற்றிடுவாய் பெண்ணே
மகிழ்வுடன் திரண்டு வாரீர்

ஆக்கம்
இ. அஜந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பான கூட்டுறவுச் செயன்முறையும் மக்களின் விழிப்புணர்வும்

உலகளாவிய ரீதியில் அறிவுப் பொருளாதாரம், அதற்கு அடிப்படையான எண் இலக்கப்புரட்சி (Digital Revolution), கணினிமயம், ஒளி இழைத் தொலைத்தொடர்பு வழியான தகவல் பரிமாற்றம்; உற்பத்தி - நுகர்வு - பங்கீடு ஆகியவற்றில் எல்லையற்ற தேவைகள் பெருகிச் செல்கின்றன. இதனால் சமூக முரண்பாடுகள், பொருத்தமற்ற போட்டிகள், அமைதியின்மை, கலாசாரச் சீரழிவுகள், வறுமை என்பவை பெருகி இன்றைய சமுதாயங்களும், நாடுகளும் திணறிக் கொண்டிருக்கின்றன. இப்பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்கும் வழிமுறையாகக் கூட்டுறவுச் செயன்முறை உள்ளது. இச் செயன் முறையைப் பொதுமக்களுக்கு எடுத்துக்கூறி விழிப்படையச் செய்யும் போது பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கிடைக்கும். பிறரை மதித்தல், பிறருடன் நேர்மயமான கருத்துப் பரிமாற்றம், குழுவாக இயங்குதல், கூட்டுப்பொறுப்பு ஏற்கும் திறன், தலைமைத்துவம், இலட்சியப்பற்று, நேர்மை, நிதானம், சுய உதவி - பரஸ்பர உதவி, ஒருவர் பலருக்காக - பலர் ஒருவருக்காக என்ற நிலைகளை மக்களிடையே ஏற்படுத்தக் கூட்டுறவுச் செயன்முறை சிறந்தமுறையில் வழிகாட்டி நிற்கின்றது.

**கூட்டுறவுச் செயன்முறை**

மனிதன் ஒரு சமூக விலங்கு ஆவான். தனித்துச் செய்வதைவிடக் கூட்டாகச் செயற்படுவதில், அதுவும் ஒற்றுமையுடன் செயற்படுவதாற் பலவற்றைச் சாதிக்கமுடியும். எல்லோருடனும் சேர்ந்து மனிதகுலம் ஒன்றே என்ற உயர்ந்த சிந்தனைக்குக் கூட்டுறவுச் செயன்முறை எடுத்துக்காட்டாகவுள்ளது. இக் கூட்டுறவுச் செயன்முறை மக்களைப் புரிந்துணர்வுடன் வாழ்க்கை நெறிக்கிட்டுச்செல்கின்றது. ஆரம்ப காலத்தில் உற்பத்திக்குத் தேவையான மூலதனத்தைத் திரட்ட ஒரு வழிமுறையாகவும், மக்கள் நுகர்வுப் பொருட்களைப் பெறுவதற்கான ஓர் ஒழுங்கமைப்பாகவும் செயற்பட்டு வந்தது. வியாபாரத்தில் தரமான பொருள், நியாயமான விலை, சரியான நிறை போன்ற கோட்பாடுகள், பின்பற்றப்பட்டன. இவற்றில் முக்கியமான விடயங்கள்:

1. அங்கத்தவர்களின் தேவைகளை நிறைவு செய்தல்.
2. அங்கத்தவர்களிடையேயும், பொதுமக்களிடையேயும் கூட்டுறவின் பயன்களை எடுத்தியம்பல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.

இவ்வாறு தனிநபர் மேம்பாடு, உளமேம்பாடு, சமூக மேம்பாடு, பண்புசார்விருத்தி, தரம் (Quality) போன்ற பலவற்றுடன் கூட்டுறவு தொடர்புடையது. இங்கு தரம் என்பது இன்று முதன்மை பெறுகின்றது. தரமான கூட்டுறவுச் செயன்முறை வாடிக்கையாளர் திருப்தியிலேயே தங்கியுள்ளது. (Quality is Customer Satisfaction) நவீன முழுத்தர முகாமைத்துவ செயன்முறைகளுக்கேற்ப கூட்டுறவு செயன்முறைகளில் இன்று மாற்றங்கள் தேவையாகவுள்ளன. இம் மாற்றங்களை உள்வாங்கி சமகால போட்டிச் சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப கூட்டுறவு முறைமைகளில் புதுமைகளும் தேவையாகவுள்ளன. இதற்குக் கூட்டுற வுத் துறை சார்ந்த வரலாற்று விடயங்களை அறியவேண்டியுள்ளது.

இங்கிலாந்து நாட்டிலே 1844ஆம் ஆண்டு றொசடேல் முன்னோடிகள் றொபேட் ஒவனின் வழிநின்று முதன்முதலாகக் கூட்டுறவுப் பண்டகசாலையை ஆரம்பித்தனர். இப்பண்டகசாலைகள் மிக வேகமாக வளர்ச்சியடையந்தன. 1959 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் தொகை 12 மில்லியன்களாக அதிகரித்து. இதுபோல; ஜேர்மனி, ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், கனடா, யப்பான், சீனா, இந்தியா ஆகிய நாடுகளிற் கூட்டுறவு இயக்கம் பரந்தஅளவில் விரிவடைந்தது.

இலங்கையில் 1911ஆம் ஆண்டு கூட்டுறவுச்சட்டம் இயற்றப் பட்டது. இதன்கீழ் விவசாயிகளுக்குக் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஐக்கிய நாணய சங்கங்கள் முதலில் உருவாக்கப்பட்டன. சிக்கனம் - சுயஉதவி ஆகிய பண்புகளை வளர்த்துக் கொள்ளவும், அங்கத்தவர் களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்தலும், அதற்கான நிதியை வெளியாட்களிடமிருந்து திரட்டவும் இச்சங்கங்கள் கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டன. தொடர்ந்து ஐக்கிய பண்டகசாலைகள், கூட்டுறவு விளைபொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கைத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள், மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களும், 1957ஆம் ஆண்டில் பல நோக்குக் கூட்டறவுச் சங்கங்களும் அமைக்கப்பட்டன. தொடர்ந்து கூட்டுறவுக் கொள்கை அடிப்படையில் 1969இல் மக்கள் வங்கி அமைக்கப்பட்டது. இவ்வாறு இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத் திலும் கூட்டுறவுச் செயற்பாடுகள் சிறந்தமுறையில் நடைமுறைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்பட்டன. கூட்டுறவு ஒரு மனித வாழ்க்கைச் செயன்முறையாகும். இதனைச் சரியாகப் புரியாத - பின்பற்றாதவர்களே பொறாமை, பொய், போட்டி, பஞ்சம், மனிதத்துவமற்ற செயல்களில் ஈடுபடுகின்றார்கள் என நோபல் பரிசுபெற்ற ரவீந்திரனாத் தாகூர் எடுத்துரைக்கின்றார். எனவே, சிறந்த கூட்டுறவு எண்ணக்கருக்களை மக்கள் மயப்படுத்தவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகவுள்ளது.

**கூட்டுறவை மக்கள் மயப்படுத்தல்**

மக்கள் ஒன்று சேர்ந்து செயற்படுகின்றபொழுது பல திறன்கள் விருத்தியாகின்றன. பொது அறிவு, ஆக்கபூர்வமான சிந்தனைகள் வளருகின்றன. கூட்டுறவின்மூலம் மிருதுவான நிலைத்திறன்களான (Soft Skills) பிறரை வசீகரித்தல், தொடர்பாடல், முரண்பாடுதீர்த்தல், அணி முகாமை, பொறுப்புக்கூடல், உதவுதல், உபசரித்தல், அனுசரித்தல், ஒத்த உணர்வு, கருத்தேற்றம் ஆகிய மனிதவள முகாமைப் பண்புகள் விருத்தி யாகின்றன. பன்முக நுண்மதி அபிவிருத்தி யடைகின்றது. கூட்டுற வாளர்கள் பங்குபற்றும் கூட்டங்களின் மேற் குறிப்பிட்ட விடயங்கள் கலந்துரையாடப்படுகின்றன. கூட்டுறவுப் பரிசோதகர்கள், பணி யாளர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுக் கூட்டுறவை மக்கள் மயப்படுத்தத் தற்போது பல செயற்றிட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

பல்வேறு கூட்டுறவு அமைப்புக்கள் வருடம்தோறும் கூட்டுறவு விழாக்கள் நடாத்திக் கூட்டுறவுசார் விடயங்களை உள்ளடக்கிய கலை நிகழ்ச்சிகளை மேடையோரின் கூட்டுறவை மக்கள் மயப்படுத்தலாம். (கவிதை, பேச்சு, நாடகம், நாட்டியம், பாடல்) போட்டிகளை நடாத்திப் பரிசுகளை வழங்கலாம். தொலைக்காட்சி, வானொலி, இன்ரநெற் ஆகியவற்றில் இவற்றை ஒளி - ஒலி பரப்பலாம்.

இலங்கையில் வடபகுதி, கூட்டுறவு ஐக்கிய மேற்பார்வைச் சபை "ஐக்கிய தீபம்" என்ற பத்திரிகையை 1945ஆம் ஆண்டிலிருந்து வெளியிடுகின்றது. அதுபோல Cooperator" என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் வெளியிட்டது. இவரில் நலிந்தவர்களுக்குக் கூட்டுறவு வாழ்வு, கூட்டுறவும் இளைஞர்களும் யப்பானில் கூட்டுறவு இயக்கம் போன்ற சிறந்த கட்டுரைகள் வெளியாகின. இதுபோல தற்போதைய பத்திரிகைகள், இணையத்தில் கூட்டுறவு தொடர்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை, கட்டுரைகளை, விளக்கங்களை வெளியிடுகின்றபோதே கூட்டுறவு மக்கள் மயப்படுத்தப்படும்.

மேலும் கூட்டுறவு அங்கத்தவர்களுக்கான செயலமர்வுகள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், கூட்டங்கள், விசேட நிகழ்வுகள் மூலமும் கூட்டுறவின் பயன்களை அங்கத்தவர்களுக்கு விளக்கி, அவர்கள் மூலமாகக் கூட்டுறவின் நன்மைகளை மக்கள் மயப்படுத்த முடியும். இச் செயன்முறையை மேலும் வலுவூட்ட மகளிர் - பெண்கள் மூலமான கூட்டுறவுக் கல்வித் திட்டங்கள் உதவுகின்றன.

**கூட்டுறவும் மகளிரும்**

கூட்டுறவை மேலும் உயிர்ப்பிக்கும் சக்தி மகளிருக்கே உண்டு. தென் கிழக்காசியப் பிரதேசக் கூட்டுறவு நிறுவனங்கள் மலேசியக் கூட்டுறவு ஒன்றியத்துடன் இணைந்து சர்வதேச மகளிர் ஆண்டினை ஒட்டி 1975ஆம் ஆண்டு யூலை மாதம் ஒரு மாநாட்டை நடாத்தினர். அதில் கூட்டுறவு அபிவிருத்தியிற் பெண்களின் பங்கு என்ற விடயம் ஆராயப்பட்டது. இதன் சிபார்சுகளின்படி இலங்கையிலும், ஏனைய நாடுகளிலும்; தேசிய ரீதியிலும், மாகாண ரீதியிலும், மாவட்ட ரீதியிலும் கூட்டுறவு மகளிர் குழுக்கள் நியமிக்கப்பட்டுப் பல்வேறு செயற்றிட்டங் கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. கூட்டுறவு இயக்கத்தினை மக்கள் மயப்படுத்தி வலுவூட்டும் சக்தி பெண்களுக்குத் தற்போது உண்டு என்ற வகையில் மேற்குறித்த செயற்றிட்டங்கள் வெற்றிகண்டன.

கூட்டுறவின் நன்மைகளை மகளிர் மத்தியிற் பரப்புவதன் வாயிலாக மக்கள் மயப்படுத்தும் செயன்முறை இலங்கையில் நற்பலன்களைத் தந்திருக்கின்றது. குடும்ப சுகாதாரம், போஷாக்கு, குடும்பப் பொருளாதாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல், பல்வேறு உற்பத்திகளை (மரக்கறி, கோழி, ஆடு - மாடு வளர்ப்பு, தையல் வேலைகள், பன்ன வேலைகள், சேமிப்புத்திட்டங்கள், கூட்டுறவுக் கல்வி வகுப்புக்கள், கணினி வகுப்புக்கள், சங்கீத - நடன - நாடக வகுப்புக்கள்) மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்குக் குறைந்த வட்டியிற் கடன்கள் ஐக்கிய நாணய சங்கம் மூலம் வழங்கப்பட்டன. இதன்மூலமாகக் கூட்டுறவு நாட்டின் எல்லா மக்களுடைய வாழ்விலும் செல்வாக்குச் செலுத்தி நற்பயன்களைத் தந்துகொண்டிருக்கின்றது. மேற்குறித்த செயற்றிட்டங்களில் முக்கியமானவற்றைக் கோண்டாவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவாணி ஐக்கிய நாணய சங்கமும் சிறப்பாக நடைமுறைப்படுத்தி இன்று வெள்ளிவிழாக் காண்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

சிக்கனம், சேமிப்பு, உழைப்பு, பரஸ்பர உதவி, சுய உதவி என்ற வகையிற் கூட்டுறவு மக்களை ஒன்றுசேர்த்து சமூகமயமாக்கியுள்ளது. சமூக அசைவில் (Social Mobility) கூட்டுறவு இயக்கம் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. கூட்டுறவு இயக்கம் ஒரு ஜனநாயக ரீதியான இயக்கமாகும். ஒருவருக்கு ஒரு வாக்குரிமை, கலந்துரையாடல், விவாதம், ஏகோபித்த கருத்து, பிரச்சினைக்குரிய இடங்களில் ஏகோபித்த கருத்து அல்லது பெரும்பான்மை, சிறுபான்மையினரைப் பாதுகாத்தல் போன்ற நல்லம்சங்களைக் கூட்டுறவு அமைப்புக்கள் கடைப்பிடித்து "கூட்டுறவே நாட்டுயர்வு" என்றவகையில் மேலும் பல அபவிருத்தி களைக் காண உழைக்க வேண்டியுள்ளது.

பாலசுப்பிரமணியம் தனபாலன் (இணைப்பாளர்),
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்நிலையும் உலகமயமாதலும்

உயிரியல் வகைப்பாட்டின் அடிப்படையில் ஆண், பெண் என்று வகைப்படுத்திப் பார்ப்பது பால் என்றும், இது பிறப்பினால் தீர்மானிக்கப்படுவதாக உடற்கூற்றுப் பண்புக் கூறுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் ஒன்றாகவும் உள்ளது. அதாவது பால்நிலை என்பது கற்றறிந்த ஒன்றாகக் காலத்துக்குக் காலம் மாற்றம் பெறும் ஒன்றாக, கலாசாரங்களின் அடிப்படையில் வெவ்வேறு பட்டதாக உள்ள ஒரு அடையாளமாகவும் பார்க்கப்படுகின்றது. பால்நிலையானது ஆண், பெண்ணுக்கும் இடையிலான உறவு முறையைக் குறிப்பதற்குப் பயன்படுகின்றது.

ஆண், பெண் சமத்துவமின்மை ஆனது ஒரு குழந்தை பிறந்தவுடனேயே ஆண், பெண் என்ற வேறுபாட்டின்மூலம் உருவாகின்றது. ஆதிப் பொதுஉடைமைச் சமூகத்திலே ஆண், பெண்களிற்கு இடையிலான சம உரிமைகள் இருந்துவந்தன. நிலவுடைமைச் சமூகத்தில் உழைப்பின் காரணமாக ஆண் குடும்ப அதிகாரத்தை தனதாக்கிக் கொண்டான். பின்பு அறிவியல் தொழில்நுட்பத் திறன்வாய்ந்த சமூக அமைப்பில் பெண் ஆனவள் உற்பத்திக்காகவும், குடும்பத்திற்காகவும் உழைக்கும் இரட்டைச் சுமைக்கும் ஆளானாள்.

இச்லர் (eichler) 1988இல் கூறும்போது "பெண் சமூகத்தில் ஒரு பொருளாகவே கருதப்படுவதாகவும், அங்கு ஆணாதிக்கமே மேலோங்கி உள்ளதாகவும், ஒரு பெண் ஆனவள் தகப்பன், கணவர், மகன் என்போருடன் சார்ந்தே வாழவேண்டி உள்ளது. அத்துடன் பெண்கள் கட்புலனாகாமலும், ஆண்களின் நியமங்களில் இருந்து விலகியவர்களாக உள்ளனர் என்றார். இவ்வாறு ஆரம்பகாலங்களில் இருந்து நிலவிவந்த பால்நிலை ஆனது உலகமயமாதற் செயன்முறை ஊடாகப் பல மாற்றங்களைப் பெற்றது. உலகமயமாதல் என்பது "சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரத் தொடர்புகளின் ஊடாக உலக நாடுகளையும், அங்குவாழும் மக்களையும், அவர்களது அனைத்துச் செயற்பாடு களையும் ஒன்றிணைக்கும் ஒரு செயன்முறையாகும்."

உலகமயமாதல் ஊடாகப் பால்நிலை ரீதியாக ஏற்பட்ட மாற்றங்களை 4 வகையான காரணிகள் ஊடாக நோக்கலாம். பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டுக் காரணிகள் ஊடாக அவதானிக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரக் காரணி இன்று நாட்டின் பொருளாதாரத்திற் பெண்களின் பங்கும், தலைமைத்துவ ரீதியான வகிபங்கு அதிகமாக உள்ளதுடன், ஆண் செய்யும் வேலையைப் பெண்களும் செய்கின்றனர். விஞ்ஞானி, பொறியியலாளர், அரசியல்வாதி, விமானஓட்டி, இராணுவத்திற் பணிபுரிதல், பாதுகாப்புப்படையிற் பணிபுரிதல் என எங்ஙனும் முதன்மை வகிக்கின்றாள்.

சமூக கலாசாரக் காரணிகள் ஆரம்பத்திற் கல்வியுரிமை, சொத்துரிமை, விவாக உரிமை மறுக்கப்பட்டது. உலகமயமாதல் காரணமாக வாழ்க்கைத் துணைத் தேர்வுரிமை, விவாகரத்து, மறுமணம் மற்றும் கருத்தரிப்பை முடிவுசெய்யும் உரிமை, சமூக, பொருளாதார, அரசியற் சமத்துவ உரிமை போன்றவற்றைப் பெறலாம். மேலும் உணவுப்பழக்கங்கள், நடை, உடை, பாவனை என்பவற்றிலும் பல்வேறு மாற்றங்களையும் மேலைத்தேய கலாசாரத்திற்கு தங்களை மாற்றி யுள்ளனர். பெண்ணியல்வாதிகளும் பெண்கள் அமைப்புக்களும் தோற்றம் பெற்றன.

அரசியற் காரணி உலகமயமாதல் காரணமாகப் பாராளு மன்றத்தில் அங்கம் வகிப்பதுடன் நாட்டினை ஆளும் தலைவர் களாகவும், தேர்தலில் போட்டியிடல், வாக்குரிமை, உலகமயமாதல் வழி பெறப்படுகின்றது.

பால்நிலை ரீதியான பெண்களுக்கு மாற்றங்கள், வளர்ச்சி, முன்னேற்றம் ஏற்பட்டபோதும் பெண்ணியல்வாதிகள் பல விமர்சனங்களையும், கண்டனங்களையும் கூறுகின்றனர். பெண்களுக் கான முழுமையான உரிமை கிடைக்கப்பெறவில்லை என்பது அவர்கள் வாதம்.

பால்நிலையானது ஆரம்பகாலங்களிலிருந்து சமத்துமற்ற முறையிற் பெண்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையானது, உலகமயமாதல் ஊடாக மாற்றங்கண்டு வருகின்றது. இன்று; பெண்கள் சமூகத்தில் ஆண்களுக்குச் சமமான சில உரிமைகளைப் பெண்கள் பெற்றுள்ளனர்.

செல்வி ஞா. தாட்ஷாயினி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து மடல்

## "பெண்களின் தங்கம் கலைவாணி மாதர் சங்கம்"

வெற்றிமாலை சூடி வெள்ளை மனதுடனே,
வெள்ளி விழாக் கொண்டாடும்
கலைவாணி மாதர் சங்கம் களிப்புடனே
வாழ்க... பல்லாண்டு வாழ்க...

அகவை அவளது இருபத்தைந்து - அவள்
அளிக்கும் ஆற்றல்மிகு சேவையினைப்
போற்றிடுவோம் கோண்டாவில் மாதர் நாம் - அவள்
பொற்பதங்கள் வாழ்கவென... பல்லாண்டு வாழ்கவென

கட்டுக்கட்டாய் காசுகளைத் தந்துதவி - கடனை
சொட்டுச் சொட்டாய்க் கட்டவைக்கும்
சோதியான மாதர் சங்கமது புகழோடு
வாழ்க பல்லாண்டு... வாழ்க... வாழ்க...

சிக்கனத்தைக் காட்டிடுவாள் - சங்கம்
சேமிப்பைப் பெருக்கிடுவாள் - கடன்
தொல்லைகள் நீக்கிடுவாள்
கண்ணியமாய் வாழ வைப்பாள்
கலைவாணி வாழ்க... வாழ்க... வாழ்க...
அன்புடனே ஆதரிக்கும் அறிவூட்டும் சங்கமது
அன்னையர் துயர்துடைக்கும் ஆற்றல்மிகு சங்கமது
கஷ்டங்களை நீக்கி அதிஷ்டங்களைக் கொடுக்கும்
ஆதார சங்கம் வாழ்க.... நீடுழி வாழ்க....

ஒன்றாய் இணைந்து ஒற்றுமையாய் வாழ்ந்திடுவோம்
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்னும்
உணர்வினைப் பகிர்ந்திடுவோம்
அன்பான தலைவருடன் - சங்கத்தின்
ஆற்றல்மிகு செயலாளருடன்
பண்பான பொருளாளருடன் - பாசமிகு
மாதருடன் பல்லாண்டு காலம் நீடுழி வாழ்க... வாழ்க...

மாதம் ஒரு கூட்டம் என்று - அங்கே
மகளிர் கூடி நிற்பர் - அன்று
ஆரவாரமாகக் கூட்டம் - அன்புடனே
வீறுநடை போட்டு வீட்டிற்குச் செல்லும்
கலைவாணி மகளிர் வாழ்க.. வளமுடன்

திருமதி கமலவேணி கிருஷ்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுக் கொள்கைகள்

றொபேட் ஓவன், டாக்ரர் வில்லியம்கிங் போன்ற தன்னலமற்ற உயர் இலட்சியவாதிகளின் சிந்தனைகளைப் பின்பற்றி 1844 ஆம் ஆண்டு றொச்டேல் நகரில் உள்ள தொழிலாளர்களால் ஒரு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டது. இவர்களை றொச்டேல் சமத்துவ முன்னோடிகள் என அழைக்கப்படுகிறார்கள். கூட்டுறவுக் கொள்கைகளை இவர்களே முதன் முதலாக வகுத்தனர். 168 ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்கொள்கைகள் இன்றும்கூட கூட்டுறவு இயக்கத்துக்கு உதவும் தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன. இவை நுகர்ச்சிச்சங்கத்துக்காக அமைக்கப்பட்டவையாயினும் ஏனைய வகைச் சங்கங்களின் தேவைகளுக்கும், செயற்பாட்டிற்கும் பொருத்த முடைய பலகொள்கைகளைக் கொண்டனவாகக் காணப்படுகிறது. காலங்கள், தேவைகளுக்கும் ஏற்ப சிறு சிறு மாற்றங்களுடன் தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

**றொச்டேல் சமத்துவ முன்னோடிகளின் கொள்கைகள்**

1. சுயாதீனமும், வெளிப்படையானதும் உறுப்பான்மை
2. ஜனநாயகமுறையில் அமைந்த நிர்வாகமும் கட்டுப்பாடும்
3. பங்குப்பணத்திற்கு வரையறுக்கப்பட்ட வட்டி வழங்குதல்
4. உடன் பணத்திற்கு மாத்திரம் கொடுக்கல், வாங்கல் வழங்கல்
5. இலாபத்தில் அங்கத்தவர்களின் ஆதரவுக்கேற்ப தள்ளுபடி வழங்குதல்
6. அங்கத்தவர் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல்
7. சந்தை விலைக்கே பண்டங்களையும் சேவைகளையும் விற்பனை செய்தல்
8. அரசியல், சமய விடயங்களில் நடுநிலைமையைப் பின்பற்றுதல்

**சர்வதேச கூட்டிணைப்பின் மூலம் 1937 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கைகள்**

1. சுயாதீன உறுப்புரிமை
2. ஜனநாயக முறையில் அமைந்த நிர்வாகம்
3. மூலதனத்திற்கு வரையறுக்கப்பட்ட வட்டி
4. அங்கத்தவர்களின் ஆதரவுக்கேற்ப இலாபத்தில் தள்ளுபடி வழங்குதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. உடன்பணத்திற்கு மாத்திரம் கொடுக்கல் வாங்கல் செய்தல்
6. கூட்டுறக் கல்விக்கு வசதி அளித்தல்
7. அரசியல், சமயச் சார்பின்மை

**1966 ஆம் ஆண்டு சர்வதேச கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தால் பிரகடனப்படுத்திய கொள்கைகள்**

1. சுயாதீனதும் - திறந்த உறுப்பாண்மையும்
2. ஜனநாயக முறையில் அமைந்த கட்டுப்பாடும், நிர்வாகமும்
3. பங்கு மூலதனத்திற்கு வரையறுக்கப்பட்ட வட்டி செலுத்துதல்
4. பங்கு பற்றலுக்கேற்ப தள்ளுபடி வழங்குதல்
5. கூட்டுறவுக் கல்வி
6. கூட்டுறவு நிறுவனங்களிடையே கூட்டுறவு

**1995 இல் சர்வதேச கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தால் பிரகடனப் படுத்தப்பட்ட கொள்கைகள்**

1. சுயாதீனதும், திறந்த உறுப்பான்மையுடையதும்
2. ஜனநாயக முறையில் அமைந்த கட்டுப்பாடும் நிர்வாகமும்
3. அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு
4. சுதந்திரமாகவும், சுயமாகவும் தொழிற்படல்
5. கல்வி பயிற்சி மற்றும் தகவல்கள்
6. கூட்டுறவு நிறுவனங்களிடையே கூட்டுறவு
7. சமூக மேம்பாடு

1966 இல் இருந்த கொள்கைகளுடன், 1995 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கைகளுடன் ஒப்புநோக்குகின்ற போது புதிய கொள்கைகளில் பெரிய அடிப்படை மாற்றங்கள் எதுவும் நிகழ்ந்ததாகக் கூறமுடியாது. ஏற்கனவே இருந்த ஆறு கொள்கைகளில் சிலவற்றில் புதிய அம்சத்துவங்கள் உட்புகுத்தப்பட்டதையும், புதியதாக சமூக மேம்பாடு என்ற கொள்கை சேர்க்கப்பட்டுள்ளமையுமே 1995 இல் ஏற்பட்டுள்ள மாற்றங்களாகும்.

**1966 ஆம் ஆண்டு கொள்கைகளுக்கும், 1995 ஆம் ஆண்டுக் கொள்கைகளுக்கும் இடையிலான ஒப்பீடு**

1. சுயாதீனமும், திறந்த உறுப்பான்மையும்

   இது 1966 ஆம் ஆண்டு இருந்த கொள்கையிலிருந்து எவ்வகை களிலும் வேறுபடாதிருப்பதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஜனநாயக முறையில் அமைந்த கட்டுப்பாடும், நிர்வாகமும் இதுவும் 1966 ஆம் ஆண்டு கொள்கையிலிருந்து வேறுபடவில்லை.

3. அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு 1966 இல் பங்கு மூலதனத்திற்கு வரையறுக்கப்பட்ட வட்டி என்ற கொள்கை புதிய கொள்கையில் அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு எனத் திருத்தி அமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

4. சுதந்திரமாகவும், சுயமாகவும் தொழிற்படல்

   இக்கொள்கையானது ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும், சுதந்திரமாகவும், சுயமாகவும் தொழிற்பட வேண்டும் என்பதைக் கூறுகிறது.

5. கல்வி, பயிற்சி, தகவல்

   1966 இல் இக்கொள்கை கூட்டுறவுக்கல்வி என இருந்தது. தற்போது பயிற்சி, தகவல் என்ற பதங்கள் சேர்க்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

6. கூட்டுறவு நிறுவனங்களிடையே கூட்டுறவு. இக்கொள்கை முற்றிலும் 1966ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கையை ஒத்ததாகவே அமைந்திருக்கிறது.

7. சமூக மேம்பாடு

   இதுவே 1995 இல் புதிதாகச் சேர்க்கப்பட்ட கொள்கையாகும். கூட்டுறவின் பிரதான நோக்கம் தனது அங்கத்தவர்களின் பொருளாதார சமூக மேம்பாட்டிற்கு உழைப்பதாகும். அத்துடன் அது சமூகத்திற்குக் குறிப்பாக சங்கம் இயங்கும் பரப்பின் சமூக நலன்களுக்கு உதவவேண்டும். அங்கத்தவர்களுக்கு மட்டுமன்றி அங்கத்தவர்கள் அல்லாதோரினதும் சமூக கலாசார, பொருளாதார விருத்திக்கும் தனது பங்களிப்பைச் செலுத்துதல் வேண்டும். இதற்கான ஏற்பாடுகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது வேலைத் திட்டங்களுடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதை இக்கொள்கை வலியுறுத்துகிறது.

இவ்வாறு காலத்திற்கேற்ப மக்களின் தேவைகள் நடைமுறையில் காணப்படும் மாற்றங்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வதன் ஊடாகவே தற்போதைய போட்டிச் சூழலுக்கு மத்தியில் கூட்டுறவு அமைப்புக் களை அபிவிருத்திப் பாதைக்குக் கொண்டு செல்ல முடியும்.

ஆக்கம்: அ. சாருக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் தீர்வுகளும்

பெண்ணியம் என்ற இயக்கம் ஒரு நீண்ட வரலாறு உடையது. கி.பி 1400 இல் இடப்பட்டது. கி.பி 1400 இருந்து கி.பி 1789 வரையிலான ஆண்டுகளில் இவ்வியக்கம் கீழ்கண்ட நிலைகளை அடைந்தது.

1வது நிலை - பெண்கள் தங்களை அவமதிக்கும் அல்லது துன்புறுத்தும் ஆண் வர்க்கத்தை எதிர்த்துப் போராட நினைக்க நிலை.

2வது நிலை - பாலியல் உறவு என்பது வெறும் உடற்கூறு சம்பந்தமானது என்று மட்டும் நினைத்த உணர்வு மாறி அதை நாகரீகமானதாகக் கருதிய நிலை.

3வது நிலை - ஆண் வர்க்கத்தினரின் குறுகிய மனப்பாங்கு, பராபட்ச மனப்பான்மையும் எதிர்த்து தங்கள் சமூகத்தில் உண்மையான அந்தஸ்தும் மதிப்பும் பெறவே வேண்டும் என்ற நோக்கு உண்டான நிலை.

பெண்களிடையே தாங்கள் துன்புறுத்தப்படுகின்றோம் என்ற உணர்வுநிலை ஏற்பட்டபோது ஒரு புரட்சி உருவாக வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது. இக்காலகட்டம் ஊடாக பெண் களிடையே கருத்து மாற்றம் உருவாகத் தூண்டுகோலாக இருந்தது. இப் பெண்ணுரிமைப் போராட்டம் ஐரோப்பாவில் 18ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் கால் கொண்டது. பிரஞ்சுப்புரட்சியின் போது பெண் சமத்துவத்திற்கான கோரிக்கைகளும் ஒருங்கிணைத்து எழுச்சி பெற்றன.

பெண்ணியமானது ஆண் மேலாதிக்கத்தில் வழிவழியாய் வந்த பண்பாட்டின் அடிப்படையில் பெண்கள் தனித்துவம் பெறாமல் வாழ்ந்து கொண்டிருப்பதையும் ஆண்களின் பாலியல் தேவைக்குப் பயன்படும் பொருளாகத் தள்ளப்பட்ட விதத்தையும், ஆண்களைச் சார்ந்து அவர்களின் நலன் பேணுவதையே வாழ்வாகக் கொண்டுள்ள நிலையையும் எடுத்துரைக்கின்றது. மேலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை ஆனது குடும்பம், அரசியல், சமூகம், வேலைத்தளங்களிலும் வழங்க வேண்டும் எனவும், பெண்கள் தாமாக முடிவெடுத்து அவர்களின் விருப்பப்படி வாழ்க்கையை நடத்திச் செல்லும் ஒரு சமூகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குவதும் இது பெண்களிடையே பல மாற்றங்களை ஏற்படுத்தி அவர்களின் மேற்கூறிய இலக்கை அடைவதற்கும் உதவும் புரட்சிகரமான செயற்பாடு உடையதாகும்.

பெண்கள் தமது உரிமைகளைப் பெறவும் தமக்கு எதிரான வன்முறைகளைக் களையவும் பெண்ணியவாதிகள் பலவகையான கோட்பாடுகளைத் தோற்றவித்தனர். 18ஆம் நூற்றாண்டில் மேலை நாட்டில் 4வகையான கோட்பாடு உருவாகியது. தாராளப் பெண்ணியம் (liberal feminism), சமகார்மப் பெண்ணியம் (Socialist Feminism) தீவிரவாதப் பெண்ணியம் (Radical feminism), மாக்ஸியப் பெண்ணியம் (Marist feminism) முதன்மை பெறுகின்றன. இவற்றினை விட கலாசாரப் பெண்ணியம் (cultural feminism), கிறிஸ்தவப் பெண்ணியம் (Cheristian feminism) கருப்புப் பெண்ணியம் (Block feminism), மகளிர்முன்னேற்றப் பெண்ணியம் (carreer feminism) போன்ற பல வகையான பெண்ணியக்கோட்பாடுகள் காணப்படுகின்றது.

பால் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (Sexual Gender Based violence) பாலியல் வன்முறை, பால் நிலை அடிப்படையிலான வன்முறை, பெண்களுக்கு எதிரான வன்முறை ஆகிய பதங்கள் மாறி மாறி பிரயோசனக்கப்பட்டு வருகின்றன. இவை அனைத்துமே மனித உரிமை மீறல்கள் ஆகும்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையும் பிரகடனமும் 1993 "ஒரு நபரின் பால்நிலை அல்லது பால் இனம் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற வன்முறை பால் இனம் அடிப்படையிலான வன்முறை எனப்படும்."

பால்நிலை ரீதியான வன்முறையில் பெண்கள், சிறுவர்கள் பாதிக்கப்பட்டாலும் குறிப்பாக பெண்களும், இளம் பெண்களும் இதன் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

**பெண்களுக்கு எதிரான வன்முறைகள்**

பலம் கொண்ட ஒருவர் பலமில்லாத ஒருவர் மீது தன் உடல் ஆதிக்கத்தை சட்டத்திற்கு விரோதமாகப் பிரயோகித்தல் வன்முறை எனப்படும். இங்கு பெண்கள் வீடுகளில் துன்புறுத்தப்படல் அவர்களின் அனுமதியின்றி பாலுறவுக்கு உட்படுத்தல், பாலியல் தொல்லைகள் கொடுத்தல் போன்றன இதனுள் அடங்கும். இத்தகைய வன்முறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானது பெண்களின் சுயமதிப்பை முற்றாக அழித்து அவர்களிற்கும் உயிர் ஆபத்தை ஏற்படுத்தும்.

பெண்களுக்கு எதிராக வன்முறை இடம் பெறும் இடங்கள் வீடு, வேலைக்களம், பாடசாலை, அகதிமுகாம், தனியே பிரயாணம் செய்கையில், ஆண் துணையின்றி தங்கியிருக்கும் இடங்களில், அடைக் கலம் தேடும் இடங்களில், பொது இடங்களில் இடம் பெறுகின்றன.

வன்முறையானது பெண்களுக்கு யாரால் ஏற்படுத்தப்படுகின்றது எனின் குடிக்கு அடிமையான கணவன் மற்றும் தந்தை, சகோதரர்களால் கல்வி குறைந்த கணவன்மார்களால், ஆணாதிக்கப் போக்கு கொண்டவர்களால், தொழில் வழங்குபவரால் தனிநபர் குழுக்களால் யுத்த காலங்களில் யுத்ததாரிகளால் மேற்கொள்ளப்படுகின்றது.

வன்முறை வகைகள் - குடும்பரீதியானது, வேலைத்தளம், கல்வி சமூக ரீதியாக, பாலியல் ரீதியாக, மருத்துவ ரீதியாக ஏற்படுத்தப்படு கின்றது.

பெண்களுக்கு எதிரான வன்முறையினால் ஏற்படும் விளைவுகள் உடலியல் ரீதியான விளைவுகள், உளவியல் ரீதியாக, சமூக ரீதியாக, இனப்பெருக்கம் சம்பந்தமாக, பாலியல் ரீதியாக கடத்தப்படும் தொற்று நோய்கள், உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் விளைவுகள் ஆகும்.

**தீர்வுகள்**

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள் வன்முறை ஏற்படுவதற்கு முன்னர் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் - மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தல் ஆகும். வன்முறைக்கு உட்பட்ட பின்னர் ஏற்படுத்தப்படும் பிரச்சனைக்கான தீர்வுகள் - மருத்துவ வசதிகள், உளசமூகத் தேவைகளைப் பெற்றுக் கொடுத்தல், பாதிக்கப்பட்டவரிற்கு ஆதரவு வழங்கும் குழுக்களை அமைத்தல், மீள் வலுவூட்டல், சமூக, குடும்ப ஆதரவை வழங்கல், பெண்கள் / சமூக அமைப்புக்களிற்கு பாதிக்கப்பட்டவர் பற்றி தெரியப் படுத்தல்.

மேற்கூறிய விடயங்கள் கூட வன்முறையிலிருந்து பெண்கள் தங்களைப் பாதுகாக்கவும், வன்முறை ஏற்பட்ட பின்னர் ஏற்படுத்தப் படும் நடவடிக்கைகளை மேற்கொள்வதைச் சுட்டிக் காட்டப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கனமும் சேமிப்பும்

ஒரு சிற்றுண்டிச்சாலையில் நான்கு பேரோடு தேநீர் அருந்தச் சென்றாலும் கையில் பத்து ரூபாய் இருந்தால் தான் நாம் முன்னின்று தேவையானதைக் கொண்டுவரச் சொல்லலாம். அருகில் உள்ள ஓர் ஊருக்குச் செல்ல வேண்டுமென்றால் ஐம்பது ரூபாய் இருந்தால்தான் தைரியமாகச் சென்று வரலாம். நான்கு பேரோடு இருக்கும்போது கையில் காசு இல்லையானால் நல்லதைக் கூட, செய்யவேண்டிய சிறு செலவைக் கூடச் செய்ய முடியாமல் பின்தங்கியே நிற்க வேண்டிவரும். நமக்குள்ளேயே ஒரு வகையான தாழ்வு மனப்பான்மை தோன்றி நான்கு பேருக்குமிடையே கலகலப்பாகப் பேசக்கூட முடியாது. அன்றாட நடைமுறை தொடங்கி வாழ்க்கைமுழுதும் பொருளாதாரம் இன்றி எதுவும் நடைபெறுவதில்லை என்பதை ஒவ்வொருவரும் நன்கு உணர்தல் வேண்டும்.

**புகழா? பொருளா?**

இளைஞர்கள் மற்றும் நடுத்தர வயதினர் பலர், பொருளின் இன்றியமையாமையை உணராமல் இளமைக் காலத்தில் பொருளைச் சேர்க்காமல் நிற்பதோடு, புகழுக்காக இருக்கின்ற பொருளையும் செலவு செய்துவிட்டு துன்புறுவோர் பலர், பின்னர் 50க்கும் மேல் போதிய பொருளாதாரம் இன்மையால் தனது பெண்ணுக்கும் பிள்ளைக்கும் உரிய காலத்தில் திருமணம் செய்ய முடியாமல், காலந்தாழ்த்தியமையால் பிள்ளைகளுடைய வாழ்க்கையையும் வீணடித்து விடுவதை நாம் பார்த்து இருக்கின்றோம். இளமைக் காலத்தில் பொருள் தேடாமல் முதுமைக் காலத்தில் வருந்துவதில் பயனில்லை. சில வயதானவர்களைப் பாருங்கள். கிழிந்த வேட்டியோடு தெருவில் நடந்து போவார்கள். இவர்கள் வாழ்க்கையில் எதைச் சாதித்து இருப்பார்கள் என்று அடிக்கடி எண்ணிப் பார்ப்பதுண்டு. நம்மைப் பார்த்தும் பிறர் அப்படி நினைக்கக்கூடாது அல்லவா? இவ்வாறு தொடக்கத்தில் சிந்திக்காததினாலேயே பலருடைய வாழ்க்கை தோல்வியாக முடிந்து விடுகின்றது.

**சிக்கனம்**

முன்னேறத் துடிப்பவர்கள் தங்கள் பொருளாதாரத்தைச் சீர்செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முடியவில்லையானால் அதுவே தங்கள் இலட்சியத்துக்குத் தடையாகிவிடும் என்பதை உணர்ந்து இரண்டு நடைமுறைகளைக் கட்டாயம் மேற்கொள்ள வேண்டும். ஒன்று சிக்கனம். இதுதான் நாம் முதலில் கையாள வேண்டிய நடைமுறை. இது நம்மைக் கட்டுப்படுத்து வதால் மட்டும் செய்யக்கூடியது. உழைப்பின்றிச் செய்ய முடிவது. நம்மால் உடனே முடிவது. நம்மால் உடனே நிறைவேற்றக்கூடிய ஒன்று. நாம் செய்கின்ற எந்தச் செலவும் நமக்கு அவசியமானது. தவிர்க்க முடியாதது என்று இருக்குமானால் மட்டும் செலவு செய்ய வேண்டும். வளர்ச்சி நோக்கிய செலவினங்களாகிய படிப்பிற்கு, தொழில் தொடங்குவதற்கு, நமது வாழ்க்கை முறைகளை எளிமையாக்கும் கருவிகள், சாதனங்கள் வாங்குவதற்கு, செலவுகள் செய்தால் நமது நேரம் மீதியாகும். பொருளாதாரம் பெருகும் எனின் அதற்கான செலவினங்களைத் துணிந்து செய்யலாம். எந்தச் செலவினமும் ஆடம்பர நோக்குடையதாக இருத்தல் கூடாது என்பதை அடிப்படைக் கொள்கையாகக் கொள்ள வேண்டும். ஆடம்பரம் புதிய புதிய செலவினங்களை தோற்றுவித்துக் கொண்டே இருக்கும். உணவு, உடை, மருத்துவம் முதலியவை வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்று செய்யப்படும் செலவினங்களாகும். இவ்வாறு இன்றியமையாத செலவினங்களை மட்டும் செய்ய இயல்பாகவே நமது வேண்டாத செலவுகள் குறையும். செலவைக் குறைப்பதே ஒருவகையில் சேமிப்புத் தான். முதலில் இந்த நடைமுறையினை நாம் உறுதியாக மேற்கொள்ள வேண்டும்.

**சேமிக்கும் பழக்கம்**

இரண்டாவது சேமிப்பு. சேமிக்கும் பழக்கம் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. நமது பண்டைய நடைமுறைப்படி 5இல் ஒரு பங்கு சேமிப்பு இருக்க வேண்டும் என்பார்கள். ஆயிரம் ரூபாய் வருமானம் என்றால் இருநூறு ரூபாய் சேமிப்பு. இன்றைய வாழ்க்கை முறையில் 10 இல் ஒரு பங்கேனும் 100 ரூபாயாவது கட்டாயம் சேமிக்க வேண்டும். சேமிப்பு என்பது நமக்குப் பாதுகாப்பும் நம்பிக்கையும் தைரியமும் ஊட்டும் ஒரு செயலாகும். கடன் வாங்காமல் இருப்பது கவலைகளைக் குறைக்கும். தன்மானத்தை வளர்க்கும். சேமிக்கத் தொடங்கும் ஒருவர் முதலில் கடன் வாங்குவதைத் தவிர்ப்பார். இருப்பதைக் கொண்டே தன் காரியத்தைச் செய்து முடித்துவிடப் பழகிக்கொள்வார். தொழில் முறையில் மிகப் பெரிய அளவில் கடன் வாங்கி முதலீடு செய்வது என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு. அது பெருமைக்குரிய துணிச்சல் மிக்க செயலாக இன்று கருதப்படுகிறது. நாம் சொல்வது அன்றாட வாழ்க்கை நடைமுறைக்கே கடன் வாங்கினால்; அத்தகைய ஒரு வாழ்க்கையை நாம் திட்டமின்றி நடாத்திக் கொண்டிருந்தால் நிச்சயமாக அது கேவலமே. தற்காலிகமாக அத்தகையதொரு சூழ்நிலை ஏற்படினும் விரைவில் அதை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். கடன் வாங்கியேனும் இந்தச் செலவு செய்வது நியாயம் தான் என்று நம் மனச்சாட்சி குரல் கொடுக்குமானால், அந்தச் செலவினங்களைக் கட்டாயம் செய்தே ஆக வேண்டும். மற்றபடி தவிர்த்து விடவேண்டும். கடன் வாங்குவதால் நம்முடைய எழுச்சி குறையும். பின் நம்மீதே நமக்கு நம்பிக்கை குறைந்துவிடும். நம்பிக்கை குறைந்தால் நமது நெடுந்தூர நடைப்பயணம் என்றும் முடியாது. இதை முன்னேறத் துடிப்பவர்கள் ஓர் எச்சரிகையாகக் கொள்ள வேண்டும்.

**தனியார் கடன்களைத் தவிர்க்க**

கடன் வாங்கியே தீர வேண்டும் என்ற நிலை ஏற்படுமானால், தனியார் கடன்களைத் தவிர்த்து, அரசாங்கம், பொது நிறுவனம், வங்கிகள் போன்றவற்றில் கடன்களைப் பெறுவதையே மேற்கொள்ள வேண்டும். கடன் பெறுவதில் சிரமம் இருப்பினும், கடனைத் திரும்பப் பெறுவதில் சில அடிப்படை விதிமுறைகள் இருக்கின்றன. நிறுவனம்தான் நமக்குக் கடன் கொடுத்திருக்கிறதே ஒழிய தனிநபர் அல்ல. ஒருவர் மாறி இன்னொருவர் வருவார். அதனால் பெரிதும் நமக்கு மனச்சுமை நேராது. ஆனால் தனியாரிடம் என்றால் அவர்களோடு உறவு முறை சரியாக இருக்கும்வரை சிக்கல்கள் எழாது. உறவுமுறையில் குறைநேர்ந்தால் சிக்கல்கள் பெரிதாகி, வாழ்க்கையில் நாம் கொண்ட குறிக்கோளைவிட்டு விட்டு யார் பெரியவர் என்று காட்டுவதிலேயே நம் திறமைகள் வீணடிக்கப்பட்டுவிடும். பலருடைய வாழ்க்கை இவ்வாறு திசைமாறிப் போனதை நாம் பாடமாக எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படித் தனியார் கடன்வாங்கி, தகராறில் முடிந்ததை எண்ணிப் பார்த்து விழிப்புணர்ச்சி பெறுங்கள். இன்றைய உலகில் காசு இல்லாமல் எந்த ஒரு நல்ல காரியத்தையும் கூடச் செய்ய இயலாது. நாம் நமது கொள்கைகளை நாலுபேர் மத்தியில் தைரியமாக எடுத்து வைக்கவும், ஏன் நாம் நிமிர்ந்து நடக்கவும் கூட நமக்கு அடிப்படையாகத் தேவைப்படுவது பொருளாதாரமே. பொருள் சேர்ப்பதுதான் குறிக்கோள் என்று இருப்பவர்கள் அதற்கான முழுநடைமுறைகளில் ஈடுபடலாம். ஆனால் எல்லோருடைய குறிக்கோளும் அதுவல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் உங்களுக்குத் தேவையான அளவு பொருள் சேர்த்துக் கொள்வது உங்கள் குறிக்கோளை அடைய உறுதுணையாக இருக்கும். இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு என்பதை கருத்திற்கொண்டு சிறு வயதுமுதல் சேமிக்கப்பழக வேண்டும். சிக்கனமும் சேமிப்பும் வாழ்க்கையை உயர்த்தும் படிகளே. இதனாலே *30* OCT உலக சிக்கனதின மாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. காலம் தாழ்த்தாதீர்கள். சிக்கனமாக இருங்கள். சேமிக்கப் பழங்குங்கள். குறிக்கோளை அடையும் பயணத்தில் சிக்கனம் சேமிப்பு இரண்டும் இரு தண்டவாளங்கள் ஆகும்.

**ஆக்கம்:**
**செல்வி சு ஜமுனாநிதி,**
**(செயலாளர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் வடக்கு
# கலைவாணி ஐக்கிய நாணயசங்க உறுப்பினர்கள்
# (2012)

தலைவர்- திருமதி ஞா.சந்திராதேவி

உபதலைவர்- திருமதி சோ.சறோஜாதேவி

செயலாளர்- செல்வி சு.ஜமுனாநிதி

பொருளாளர்- திருமதி கோ.சுகந்தி

## நிர்வாகசபை உறுப்பினர்கள்

- ஞா.சந்திராதேவி
- சோ.சறோஜாதேவி
- சு.ஜமுனாநிதி
- கோ.சுகந்தி
- நா.சந்திரலேகா
- வி.சாரதா
- கா.சுதர்சினி

## கணக்காய்வாளர்கள்

- க.சியாமளா
- சு.சுகிர்தா

## சங்க அங்கத்தவர்கள்

- பூ.இராஜேஸ்வரி
- செ.பரிமளம்
- ம.பூமலர்
- அ.சிவமணி
- த.ரதிதேவி
- நா.சந்திரலேகா
- சி.ஞானசோதி
- ஞா.சந்திராதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இ.மோகனேஸ்வரி
- சி.சுஜித்தா
- கிறி.கௌரி
- சு.சாந்தி
- ந.சந்தானலட்சுமி
- சு.மதிவதனி
- சோ.புஸ்பலதா
- சு.இரத்தினேஸ்வரி
- சி.மகேஸ்வரி
- க.தேவமலர்
- த.கர்ணி
- சி.விஜயராணி
- சோ.சறோஜாதேவி
- கோ.சுகந்தி
- க.சியாமளா
- பா.பாக்கியராணி
- சி.தர்மினி
- ப.இராசமலர்
- அ.ஜெயரஞ்சினி
- தி.குமுதினி
- ந.வினோதினி
- க.வசந்தாமணி
- யோ.வரலட்சுமி
- செ.இராணிமலர்
- சி.சாரதாதேவி
- கி.சறோஜினிதேவி
- ஜெ.பத்மலோஜினி
- ஜெ.விமலாதேவி
- சி.சிவரூபி
- மு.குலமலர்
- அ.இந்திராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கா.சுதர்சினி
- ஆ.திஷாந்தினி
- இ.சுதர்சினி
- த.இந்திராணி
- ச.றெஜினா
- பா.பாமினி
- அ.கவிதா
- இ.குமுதினி
- பி.துஷ்யந்தினி
- சு.சுகிர்தா
- க.அன்னலட்சுமி
- ம.மைதிலி
- கி.பத்மேஸ்வரி
- இ.சிவநாயகி
- யோ.சந்திரகுமாரி
- யோ.சந்திரகுமாரி
- சு.ஜமுனாநிதி
- வி.சாரதா
- கி.கமலவேணி
- உ.வசந்திமாலா
- ஞா.தாட்சாயினி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆண்டுவிழா மலர்
# நன்றியுரை

கோண்டாவில் வடக்கு கலைவாணி ஐக்கியநாணய சங்கசபை மற்றும் சங்க அங்கத்தவர்கள் ஒன்று கூடி 25ஆவது ஆண்டு விழாவினைக் கொண்டாடத் தீர்மானித்ததோடு, அனைவரது ஒத்துழைப்புடனும் இம்மலர் வெளியிடப்படுகின்றது. முதலில் இவ்விழாவினைக் கொண்டாட அனுமதி தந்த கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு ஏ.மு. அருந்தவநாதன் அவர்கட்கும், இவ் விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற பிரதம விருந்தினர், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. V.K.அருந்தவநாதன் அவர்கட்கும், சிறப்பு விருந்தினரான சமாசத்தலைவர் திரு. செ. இலகுநாதன் அவர்கட்கும், கௌரவ விருந்தினர்களுக்கும் மற்றும், இம் மலருக்கு ஆசியுரை வழங்கிய திரு ஞானசம்பந்த ஜோதிநாதக் குருக்கள் மற்றும் நல்லூர் பிராந்திய சபைத் தலைவர் திரு. நி.பு. ஜேசுராஜா அவர்கட்கும், வாழ்த்துச் செய்தி வழங்கிய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. V.K. அருந்தவநாதன் மற்றும் சமாசத் தலைவர் திரு. செ. இலகுநாதன் அவர்கட்கும், மற்றும் இம்மலருக்கு விளம்பரங்களைத் தந்துதவிய அனைவருக்கும், எமது நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

மேலும் இம்மலருக்கு ஆக்கங்களைத் தந்துதவிய அன்பு நெஞ்சங்களுக்கும், இவ் விழா சிறப்புற நடாத்துவதற்கு இட வசதியைச் செய்து தந்த யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அதிபர் திருமதி வி. கடம்பமலர் அவர்கட்கும், பான்ட் அணி வசதியைச் செய்து தந்த யா/கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலய அதிபர் திரு. ச. வாமதேவன் அவர்கட்கும், இம்மலரை வெளியிட உதவிய மலர்க் குழுவினரான திருமதி கோ. சுகந்தி, செல்வி சு. ஜமுனாநிதி, திருமதி இ. குமுதினி, திருமதி அ. மோகனேஸ்வரி ஆகியோருக்கும், ஒளி, ஒலி வசதிகளைச் செய்து தந்தவர்களுக்கும், மேலும் பல வழிகளிலும் உதவிய கோண்டாவில் வடக்கு சனசமூக நிலையத்தினருக்கும், வெளிநாட்டி லிருந்து பண உதவிகளைச் செய்து உதவியவர்களுக்கும், தேநீர், சிற்றுண்டி வசதிகளைச் செய்தவர்களுக்கும், இம் மலரை அழகுற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிட்டுத் தந்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும், மேலும் ஆண்டு விழாவைச் சிறப்புற நடாத்த உதவிய எமது சங்க நிர்வாகத்தினருக்கும், பல வழிகளிலும் மேலும் உதவியவர்களுக்கும் எம்மாலான நன்றிகளைத் தெரிவிப்பதோடு இவ் விழாச் சிறப்புற நிகழ்ச்சிகளில் ஈடுபட்ட நெஞ்சங்களுக்கும், மற்றும் இவ் விழாவிற் கலந்து கொண்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது சங்கம் சார்பான நன்றிகளைத் தெரிவிப்பதோடு இந்நன்றியுரையை நிறைவு செய்து, நன்றி கூறத் தவற விட்டவர்களுக்கும் தயவான மன்னிப்புடன் அனைவருக்கும் அன்பு நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org